இஸ்லாமும் இசையும்

மௌலவி பாஜில், நாயகக் கவிமணி, ஹஸ்ஸானுல் ஆலம்
அல்ஹாஜ் ஜி. எம். எஸ். ஸிராஜ் பாக்கவி

இசையின் இயக்கம்

இயற்கையின் இயக்கம் ஓசையாய்—ஒலியாய் உள்ளது. காற்றின் ஓசையும் கடலின் ஓசையும் மருவி மருவி இறங்கும் அருவியின் ஓசையும் புள்ளினங்கள் எழுப்பும் இசை ஒலிகளும் இயற்கையின் இயக்கம் இசையின் - இயக்கம் என்பதை நன்கறியச் செய்கின்றது. இந்தக் கண்கொண்டு நோக்குவது என்பதே இறையியல் நோக்கமாகும்.

மனிதன் உலகத்தை நோக்குகின்றான்; விஞ்ஞானி உற்று நோக்குகின்றான்; கவிஞன் என்பவனே உண்மைகளை நோக்குகின்றான். கவிஞன் ஒருவனே உண்மையைச் சொல்கின்றான். 'ஆசை தரும் கோடி அதிசயங்கள் உண்டெனினும் ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம்''......என்று பாரதி அழகாகச் சொன்னார். இந்த மகா வாக்கியத்தின் பெற்றியை என்னவென்று சொல்வது? ஆம்! உலகில் இசைக்கு வயப்படாத உயிரினங்கள் என்பவைகள் எவையுமில்லை. காட்டின் விலங்கறியும்; கைக் குழந்தையும் தாய் வழங்கும் இன்னிசையில் தன்னை மறந்து தனித் துயில் கொள்கின்றது. கொடிய விலங்குகளும் அரவங்களும் இசையில் தன்னை மறந்த நிலையில் கட்டுண்டு மயங்கக் காண்கின்றோம். இம்மண்ணுலகில் மட்டுமின்றி சந்திர மண்டலத்திலும் இசை ஒலி பரவி இருப்பதனை அண்மை ஆய்வுகள் தெருவித்திருப்பதை நாம் நன்கறிவோம்.[1]

இறைவனுக்கு இசைவான ஒலி இன்னது; இசைவில்லாத ஒலி இன்னது என்றும்கூட நாம் உணர்ந்து கொள்வதிலும் தவறு இல்லை; இவ்வறிவும் மெய்யறிவாகிறது. இறைவனுக்கு உவந்த ஒலிகளுக்கு அண்ட கோடிகளில் எல்லாம் ஒலிக்கத் தடையே இல்லைபோலும். இறைவன் ஏற்றுக் கொள்ளாத ஒலிகளுக்கு நிலவுலகைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்துக்குள் மட்டும் ஊடுருவலாம் என்று இறைவன் வைத்து விட்டானோ என்று

யூகிப்பதிலும் ஆச்சரியம் இல்லை. இந்த அளவுக்கு சந்திர மண்டலத்திலும் இசை ஒலிக்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்ற காலத்தில் வாழுகின்றோம்.

இயற்கையின் நல்லியக்கம் வெவ்வேறு இசை ஒலிகளில் உள்ளன. கானப்பறவை கலகலெனும் ஓசையிலும் காட்டு மரங் களிடைக் காட்டும் இசையினிலும் ஆற்று நீரோசை அருவி ஒலியினிலும் நீலப் பெருங்கடல் எந் நேரமுமே தானிசைக்கும் ஓலத்திடையே உதிக்கும் இசையினிலும் மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால் ஊனுருகப் பாடுவதில் ஊறிடும் தேன் வாரியினும் ஏற்ற நீர்ப்பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குவ கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஓசையினிலும் சுண்ணம் இடிப்பார் சுவை மிகுந்த பண்களிலும் பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும் வட்டமிட்டே பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக் கேட்டு இசைத்திடுமோர் கூட்ட முதல் பாட்டினி லும் நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நின்றொலிக்கும் பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் என்று குயில் பாட்டில் பாரதி அழகாகக் கூறினார்.

இப்படி நெஞ்சை ஈர்க்கும் நீணிலத்தின் இசை நலத்தை மனிதனால் இழக்க முடியுமா? மாந்தன் கொள்ளும் கவலைகளை எல்லாம் நொடியினில் மறக்கச் செய்யும் இசை ஆற்றல் மிகப் பெரியதாகும். நல் இசைக்கு வயப்படாத மனித மனம் மிக்க கொடியதாகவே ஆகிவிடும் என்பது மேலோர் கருத்தாகும்.

இறைவனின் படைப்பினங்களில் பாடும் பறவை இனங்கள் மட்டுமல்ல: பாடும் மீன் இனங்களையும் காண்கின்றோம். ஆகவே இசை என்ற அற்புதமான ஒன்று இறைவனின் படைப்பில் இனிமையான ஒன்றாகவே இலங்குகின்றது. எனவே இசை என்ற ஒன்றை எல்லா உயிரினங்களும் கேட்டு மகிழ் கின்றன. 'இசை'...என்ற தமிழ்ச் சொல்லே எல்லா மனங்களை யும் இசைவிக்கின்ற ஆற்றல் வாய்ந்தது என்ற பொருளில் பயிலு கின்ற சொல்லாகவே உள்ளது.

உலகில் எல்லா நாட்டினராலும் எல்லா மதத்தாராலும் விரும்பப்படும் வண்ணமாக இறைவனே நல்இசையை உண்டாக்கி உள்ளான் என்பதனை இங்கு நாம் நன்கறிதல் வேண்டும். மனிதன் பிறரை மகிழ்விக்கவும் தனது மகிழ்ச்சியை வெளியாக்கவும் இசை யைப் பயன்படுத்துகின்றான்; கவலையை நீக்கவும் களிப்பினை ஆக்கவும் இசையானது மனிதனுக்குப் பேருதவிபுரிந்து வருகின்ற தையும் இசையின் இயக்கம் பிரபஞ்சம் தழுவிய நிலையில் உள்ளது என்பதையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

துவக்க இஸ்லாமும் தூய இசையும்

உலக சமயங்களில் இஸ்லாமிய சமயம் தனிச்சிறப்பு வாய்ந்த பெரும் சமயம். உலகில் ஏற்பட்ட முன் சமயங்களின் சாரமெல்லாம் உட்பொதிந்த நிலையிலும் ஏக இறைவனை நிறைவு ஆக்கப்பட்ட நிலையிலும் இறுதி சமயமாக இஸ்லாம் புலர்ந்தது. உலகின் அனைத்துப் பகுதிகளுக்கெல்லாம் அவ்வப் போது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட முன் தீர்க்கதரிசிகளின் நற்பண்புகளையும் நல்லியல்புகளையும் ஒரு சேர அமைக்கப்பட்ட நிலையில்தான் நபிகள் நாயகமவர்களை இறுதி நபியாக அரபு நாட்டில் தோன்ற வைத்தான்.

சிறியனவாக—பெரியனவாக அவ்வக்காலத்து மக்களுக்கு அருளப்பட்ட முன்மறைகளின் கோட்பாடுகள்—கொள்கைகளை யெல்லாம் தன்னுட்கொண்ட நிலையிலும் இறுதிகாலம் வரை நிலவுகில் நின்றிலங்க—இறுதி இஸ்லாமின் முழு மறையாகவும் சம்பூரண மறையாகவும் ஆக்கி நபிகள் நாயகமவர்களுக்கு குர் ஆனை அருளவும் செய்தான். இறைவன் அருளிய குர்ஆனை முன்வைத்து வாழ்ந்தும் வளர்ந்து கொண்டும் வாகையோடு ஒளிருகின்ற சமயமே இஸ்லாமிய பெருஞ்சமயமாகும் என்பதனை அனைத்து மக்களும் நன்குணர்வர்.

ஆதி இஸ்லாம் தோன்றிய காலம் வேறு; நிறைவு செய்யப் பட்ட காலம் வேறு. தொடக்க காலத்தில் இறைவன் மனி தனுக்கு வழிகாட்டவும் அவனை மேம்படுத்தவும் பற்பல மறை களை பற்பல இறைதூதுவர்கள் வாயிலாக அருளி இருந்ததனை யும் நாம் நன்கறிவோம். அவ்வாறு இறைவன் கால நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அருளியதில் முன்மறைகளாகத் தோன்றிய வற்றில் தாவூத் நபியவருக்கு யூனானி மொழியில் அருளப்பட்ட 'ஜபூர்' என்ற வேதத்தை இசையாக இசைத்து மக்களுக்குப் போதிப்பதற்கு ஏற்றவண்ணம் கீர்த்தனைகளாகவே அருளினான் என்பதைப் பலரும் அறிய மாட்டார்கள். எனவே ஜபூர் மறையை உரைநடையில் வழங்காமல் முழுவதையும் இசை வடிவக் கீர்த்தனைகளில் வழங்கியதில் இருந்து இசைக்கு மக்கள் மதிப்புக் கொடுத்து வந்த காலத்தில் மக்கள் விருப்பம் போல் மறையை இறைவன் வழங்கி புனித இசையை அங்கீகரித் துள்ளான் என்பதையும் புரிந்து கொள்கின்றோம்.

ஜபூர் மறையை இறைவன் இசை மாலைகளாகவே ஈந்ததை அக்கால மக்கள் மிக்க விருப்புடன் ஏற்றதை நாம் வரலாற்றில்

அறிவதன் மூலம் இஸ்லாமிற்கும் இறை இன்ப இசைக்கும் தொன்மைக் காலத்தில் இருந்த தொடர்பை அறிந்துகொள்ள முடிகிறது. அதன் காரணமாகவே மக்கள் அக்காலத்தில் தாவூத் நபி மீது எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தார்கள்—என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

தாவூத் நபியவர்கள் அதனை இசைத்தபோதெல்லாம் முன்னால் கூடி இருந்த மக்கள் மெய்மறந்து கேட்டிருக்கிறார்கள். அந்த இசை நாதத்தில் திளைத்த பறவைகள் எல்லாம் அடைந்த இன்பம் எல்லையற்றதாகும். இத்தகைய முன் வரலாறு உடைய இஸ்லாம் இசையை எதிர்ப்பதாகச் சிலர் சொல்வது முற்றிலும் ஆய்வறிவு இல்லாத நிலையையே காட்டுகிறது. இசை என்று சொன்ன மாத்திரத்தில் எடுத்த எடுப்பில் அது கூடாது என்று கூறிவிடுவது சரியன்று. மனிதன் தனது அற்புதமான இன்குரலாலும் மென்குரலாலும் இசைப்பதை இஸ்லாம் மறுக்கவில்லை என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அரபு நாட்டில் வளர்ந்த கலைகளில் கவிதைக் கலையும் இசைக் கலையும் முதன்மையானதாகும், பெருமானார் நபிகள் நாயகமவர்களின் தோற்றத்திற்கு முன்பே நல்ல கவிஞர்கள் அரபு மொழியில் இசை நலம் மிக்க அரிய பொருள்வளப் பாக்களை வழங்கியுள்ளார்கள். உவமைகள் கொழிக்கவும் சிலேடைகள் சிறக்கவும் பாடி மக்களை மகிழ்வித்திருக்கின்றார்கள். பெண்களை அலங்கரிக்கும் அழகான வருணணைப் பாடல்களை உருவாக்குவதில் அரபுப் பாவலர்கள் உலகப் புகழைப் பெற்றிருந்தார்கள்.

அரபில் வாழ்ந்த பாவாணர்களில் 'முதநப்பீ...' என்ற கவிஞனின் கவிதையில் மக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை தவறான வழியில் பயன்படுத்த முனைந்து அற்புதமான கவிதைகளைப் பாடி, தானும் ஒரு நபியே என மக்களை ஏமாற்றத் துணிந்தான். கவிதைகளை ஏற்ற மக்கள் அவனை நபி என ஏற்க மறுத்து அவனைப் புறக்கணித்த வரலாற்றை அரபு இலக்கிய வரலாற்றில் நாம் இன்றும் காண முடிகிறது.

கவிதைகளையும் கவிஞர்களையும் அரபு மக்கள் முற்காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி புறம்பானவர்கள் என்று புறம் போக்கியது கிடையாது. அரபு மக்கள் கவிதைகளைப் பலர் கூடும் இடங்களில் எழுதித் தொங்கவிட்டு பலரையும் பயிலச் செய்யும் அளவுக்கு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதை அரபு இலக்கியத்தில் காணலாம்[8]. இவ்வாறு பண்டைய அரபு மக்களின் மரபு வழிபட்ட (Traditional Creation) இலக்கியங்கள் தோன்றியுள்ளன என்பதை நாம் அறிந்து கொள்வதன் மூலம் அரபு—பாரசீக இலக்கிய வளர்ச்சியை நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

குர்ஆனும் கோல இசையும்

'குர்ஆன்' என்ற சொல்லுக்கு ஓதக் கூடிய'து; ஓதப்பட்டுக் கொண்டே இருக்கக் கூடியது; இருக்கும் காலமெல்லாம் உயிருடன் இசைக்கப்பட்டுக் கொண்டே இன்பத்தை நல்க வல்லது என்பதே அரபியில் பொருள். குர்ஆனுக்குரிய பல பெயர்களுள் 'அர்ரூஹ்' உயிருள்ளது என்ற பெயரையும் அது கொண்டமைக்குக் காரணம் குர்ஆன் ஓதும் இசையானது உளம் கலந்து, ஊன் கலந்து, உயிர்கலந்து, உயிரணுக்குவையிலெல்லாம் கலந்து இன் பூட்ட வல்ல தென்பதை நாம் அறியவேண்டும். நாயகத் தோழர்கள் இசைத்த குர்ஆனின் இன்ப நாதத்தைக் கேட்ட ஒட்டகம் போன்ற கால்நடைகளும்கூட மயங்கி நின்ற வரலாற்றினையும் நாம் அறிய முடிகிறது.

அல்லாஹ் அண்ணலெம் பெருமானார் நபிகள் நாயகமவர்களுக்கு அருளிய இனிய திருமறை உரை நலத்தில் அமைந்திருந்தாலும் அதை அனைவரும் படித்துப் பயன் பெறுவதோடல்லாமல் குர்ஆனிற்குரிய இசை முறையுடன் (தஜ்வீத் முறையுடன்) இசை கூட்டி இசைத்து இசைத்து இன்பம் அடையக்கூடிய விதத்திலும் அது அமைந்துள்ளதானது அறபுக் கவிஞர்களையும் அறபு இலக்கிய வல்லுனர்களையும் அகில உலக இலக்கிய விற்பன்னர்களையும் அதிசயத்துள் ஆழ்த்தியுள்ள பெற்றியினை நாம் காணுகின்றோம். அனைத்துலக அமைதிக்காக அரபு மண்ணில் தோன்றிய தூய மறையாம் குர்ஆன் ஓதற் கெளிதாக—உணர்தற்கரிதாக அமைப்பில் உள்ளதை அறிஞர்கள் உணர்வார்கள். அக்கால அரபுமக்களின் அகத்தை அள்ளும் அறிவின் விளக்கமாகவே அம்மறை உதித்ததென்பதை நாம் அறிவோம். குர்ஆனில் எல்லா அறிவுகளும் ஞானங்களும் விஞ்ஞான மெய்ஞ்ஞானப் பேரறிவுக் கருவூலங்களும் கூறப்பட்டிருப்பது போன்று இசைத்து ஓதக் கூடிய இன்ப நலத்தையும் கட்டுக்கோப்பான அதன் வசன அமைப்புக்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.

நோக்குவார் நோக்கிற் கெல்லாம்
நுண்பொருள் வாய்க்கும் வண்ணம்
ஆக்கியே அல்லாஹ் தந்த
அருமறை குர்ஆன் அன்றோ!

இல்லாத பொருளே இல்லை;
இணையில்லாக் குர்ஆன் இங்கு
சொல்லாத பொருளே இல்லை;
சோபிதம் பாராய் நெஞ்சே!

என்றவாறு 'நெஞ்சில் நிறைந்த நபிமணி' காவியத்தில் பாடப்பட்டதற்கேற்ப கவின்மிகு குர்ஆன் கலைகளின் இருக்கையோ என்ற முறையில் அமைந்துள்ளதானது கல்வி மான்களைச் சிந்திக்க வைக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் ஹஜ்ரத் அலியார் (ரலி) அவர்கள் ''ஜமீஉல் இல்மி ஃபில் குர் ஆனி லாக்கின், தகாஸர அன்ஹு அஃப்ஹாமுர் ரிஜாலி'' அனைத்துக் கல்வி ஞானங்களையும் குர்ஆனில் உள்ளடக்கியே இறைவன் தந் துள்ளான்; ஆனால் மனிதர்கள் அவற்றையெல்லாம் சரியான முறையில் விளங்கிக் கொள்வதில்தான் பிரச்சினை இருக்கிறது— என்று மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதனை இங்கு விரிவாக நான் எழுதுவதற்குக் காரணம் புலமைக்கும் ஆராய்ச்சிக்கும் கலை நுகர்வுக்கும் குர்ஆன் அடிப் படையில் பல கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தவே இங்கு விரிவாக்கலானேன். அனைத்து அறிவுக்கும் புலமைக்கும் இசைக்கும் அடிப்படை நம் திருமறை என்பதை ஒத்துக்கொண்டால் இஸ்லாத்துக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை நன்கறிந்து கொள்ள முடிகிறது.

கவிதை என்பது இசை நலத்தில் வடிவம் கொள்வதாகும். ஆம் இசையில்லாத கவிதை என்பது இறக்கைகள் இல்லாத பறவையை ஒக்கும். ஆகவே கவிதை என்பது இசைக்கப்படுவதாகும்; அதாவது இன்குரலால் பாடுவதாகும். குர்ஆனின் சொற்சேர்க்கை அதிசயமாக அமைந்துள்ளது. செப்பலோசையின் சிறப்பும் பதக் கொத்தணி போன்ற சீரும் ஒரே அசையில் முடிவுறும் அற்புதமும் இசைத்து ஓதுவதற்கு ஏற்ற விதத்தில் அமைந்துள்ளதை இசை யறிவு படைத்த இன்குரல் வாணர்கள் நன்குணர்வார்கள். குர்ஆனில் சில இடங்களில் அறபு யாப்பிலக்கணத்துக்கு மூற்றி லும் சரியான முறையில் ''லன் தனுலுல் பிர்ர ஹத்தா துன்ஃபி கூ''... என்ற கவிதை நலமிக்க வாசகங்களும் உள்ளன.

உத்பா என்பவன் இஸ்லாத்தை ஏற்க மறுத்தவன். நபிகள் நாயகமவர்களிடத்தில் ஒருநாள் வந்து, முஹம்மத் அவர்களே! தாங்கள் வேண்டுவன எவையாயினும் வழங்குகின்றோம், உங்கள் கொள்கைகளை மட்டும் கைவிடுவீராக என்று கேட்டபோது

கதிரை என் வலக்கரத்தில் வைத்துப் பின் இடக்கரத்தில் மதியை வைத்தபோதும் மனமாறேன் என்றார் அண்ணல் என்று நபிமணிக் காவியத்தில் கூறப்பட்டு உள்ளதுபோல்—நாயகம் கூற நபிய வரின் மன உறுதியைக் கண்டு மனம் சோர்ந்து உத்பா புறப்பட லானான். அப்போது நாயகமவர்கள் 'உத்பா அவர்களே, வந்தது வந்தீர்; குர்ஆனிலிருந்து சில வசனங்களை மட்டும் நான் இசைத்து ஓதுகின்றேன்; கேட்டுவிட்டுச் செல்லுங்கள்' என்று கூறிய பின் நாயகம் குர்ஆனை இசைத்து இன்குரலால் ஓதத் துவங்கினார். மெல்லிசை வெள்ளம் போல நல்லிசை கொண்டு இசைத்து ஓதினார்கள்.

'பாவுக்கும் பாவாய்ப் போற்றும் — பண்புறு உரையாய் நெஞ்சில் மேவிடும் மறையின் மாண்பை விளக்கவோ! என்றார் அண்ணல்'

அவ்வளவுதான் குர்ஆனை ஓதக் கேட்டு மயங்கிய உத்பாவோ இனியும் இங்கு அமர்ந்து கேட்டால் மனம் மேலும் இளகிவிடும் என்றெண்ணி-முஹம்மதே! போதும்! போதும்! வருகின்றேன் என்று அந்த இடத்தைவிட்டு சட்டென்று அகன்று தமது குழு வைச் சேர்ந்தவர்களிடம் சென்று இவ்வாறு கூறலானான். அதனை நெஞ்சில் நிறைந்த நபிமணி காவியத்திலும் இசைக்கப்படு கிறது.

உயிரினைக் கொள்ளை கொள்ளும்
    ஒப்பரும் மறையை இன்றே
நயமிகு குரலில் ஓத
    நான் கேட்டேன் என்றான் உத்பா

தேனினும் இனிய அந்தக்
    திருமறை இன்ப நாதம்
ஊனெலாம் கலந்தி னித்த
    உயர்வதும் என்னே! என்றான்

ஆயிரம் ஏட்டைச் சொல்ல
    அண்டையில் இருந்து கேட்டேன்;
தூயதாம் குர்ஆ னைப்போல்
    துய்த்திலேன்; இல்லேன் என்றான்

கல்லார்க்கும் கற்ற வர்க்கும்
    கருத்தினில் ஒளியை ஊட்டி
எல்லார்க்கும் பொதுவாய் நிற்கும்
    எழில்மறை குர்ஆன் என்றான்

உத்பா என்பவனிடம் நபிகள் நாயகம் குர்ஆனின் சில வசனங்களை சாதாரணமாகப் படித்திருந்தால் இந்த உணர்ச்சியை அவன் அடைந்திருக்க முடியாது. பெருமானாரவர்களுக்கே உரிய இன்குரலால் — குர்ஆனுக்குரிய 'தஜ்வீத்' கிராஅத் முறைப் படி மெல்லிசையால் இசைத்து ஓத ஓத—உத்பாவின் உள்ளம் நெகிழ்ந்துருகத் துவங்கி விட்டது என்றால் இசைக்குரிய தனி ஆற்றலை எல்லோரும் இங்கு நன்குணர முடிகிறது.

இன்னொரு சமயம் அகழ்ப்போர் நிகழ்ந்த காலை மண்ணை அகழ்ந்த தோழர் பெருமக்கள் வேலையின் எளிமைக்காக கவிதை களை இசைக்கத் தொடங்கிவிட்டனர். இச்செயலைப் பெருமானார வர்கள் ஏற்றுக் கொண்ட வண்ணம் தோழர்களை உற்சாகப் படுத்துவதற்காக சுயமாகத் தாங்களே சில கவிதை வரிகளை இயற்றி இசைக்க ஆரம்பித்தார்கள். தோழர் பெருமக்களோடு நாயகமும் மண் சுமந்த நிலையில்

''அல்லாஹும்ம லாஐஷ இல்லா ஐஷல் ஆகிரா
ஃபஃபிரில் அன் ஸாரா வல்மு ஹாஜரா''

என்ற தங்கள் கவிதை அடிகளைத் தங்களுக்கே உரிய இன்குரலில் இசைத்து தோழர்களை ஊக்குவித்தார்கள்.

ஒருமுறை மக்காவில் முஸ்லிம்களுக்குப் பகைவர்கள் சொல்லொணாத் தொல்லைகளைத் தர—குறிப்பிட்ட தோழர் பெரு மக்களை ஜஃபர் இமாம் தலைமையில் அண்டை நாடான அபி சீனிய கிறிஸ்தவ நாட்டிற்கு அடைக்கலமாக நாயகம் அனுப்பி வைத்தார்கள். அபிசீனிய நாட்டின் மன்னரான நஜ்ஜாஷி என் பவரிடம் அமைச்சர்கள் முஸ்லிம்களைப் பற்றி நல்லவை கூறாமல், தீயவை கூற—நடுநிலை நோக்குடைய மன்னரோ 'முஸ்லிம்களிடம் விசாரணை செய்யாமல் நாம் ஒருமுடிவுக்கு வருவது முறையன்று என முடிவெடுத்து முஸ்லிம்களின் தலைவரான ஜஃபரைத் தன்னிடம் வரவழைத்து உங்கள் கொள்கை எவை? என விசாரிக்கலானார். அங்கிங் கெனாத வண்ணம் அனைத்திலும் அனைத்துமானவனும் அரூபியானவனுமான அல்லாஹ் என்ற ஏகன் ஒருவனையே வணங்கிடவேண்டும் என்று எங்கள் நபி எங்களுக்குப் போதிக்கிறார்கள். நாங்கள் அவர்களைப் பின்பற்றி அமைதியான வாழ்க்கை நடத்தி வரும்போது பகைவர்களின் தொல்லைகள் அதிகரித்துவிட்டன; அதனால் சில நாட்கள் தங்கள் நாட்டிலாவது அடைக்கலமாக வாழ்ந்து திரும்பிவிடலாம் என்று வந்துள்ளோம்—எனக் கூறவே—அப்படியென்றால் உங்கள் நபிக்கு

மறை ஏதும் அருளப்படுகிறதா? என வினவ—ஆம்! என்றும் குர் ஆன் என்றும் விவரமாக ஜஃபர் கூறலானார். எங்கே குர்ஆனி லிருந்து சிலவற்றை எடுத்துரைப்பீராக! என மன்னர் கேட்ட பின்னர் குர்ஆனின் மர்யம் என்ற அத்தியாயத்தைத் தமக்கே உரிய இன்குரலில் இமாம் ஜஃபர் இசைத்து ஓதலானார். ஏசு நாதரின் தாயாரான அன்னை மரியா பற்றி இவ்வளவு நயமாக குர்ஆன் இயம்புகின்றதே என்று நஜ்ஜாஷி சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். குர்ஆனின் ஈர்ப்புச் சக்தியில் ஈடுபட்ட மன்னரின் கண் களில் நீர்த்துளிகள் மல்கி விட்டன. அத்துடன் நின்று விடாமல்,

'இன்ஜீல்என் றோது கின்ற—இணையிலா மறையும் சொன்ன
இன்மறை இதுதான் என்றே—இயம்பிட லானார் மன்னர்'

குர்ஆனுக்குரிய இசையில் ஓதியதாலன்றோ மன்னர் உணர்ச்சி பெற்று—தமது நாட்டில் விரும்பிய மட்டும் இருந்து வாழ்ந்து வர லாம் என்று முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கி மகிமைப்படுத்தி வைத்த வரலாற்றையும் நன்கறிகின்றோம்.

ஒரு முறை மதீனா பள்ளி வாயிலின் உட்பகுதியில் அப்துல் லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் தமக்கே உரிய அழகிய குரலில் குர்ஆன் வசனங்களை இசைத்து ஓதிக் கொண்டிருக்க-அண்மை இல்லத்தில் இருந்த அண்ணல் நபியவர்கள் மெதுவாக வந்து அவரின் குர்ஆன் இசைப்பை மகிழ்வுடன் கேட்டுக்கொண்டு நின்றிருந்தார்கள். இப்னு மஸ்ஊத் ஓதி முடித்ததும் அவர் முன் சென்று எனது நண்பரே! "எனக்கருளப்பட்ட குர்ஆனை என்னை யல்லாத பிறரின் வாயிலிருந்து இன்குரலால் இசைக்கப்படுவதை நான் காது தாழ்த்திக் கேட்க மிகவும் விரும்புகின்றேன்' — என்று நபிகள் நாயகம் நவின்று அவரையும் உற்சாகப்படுத்தியுள்ளார்.

இஸ்லாமும் கவிஞர்களும்

'கவிஞர்கள் வரம்பு மீறுகின்றவர்கள்......' என்ற வாசகம் குர்ஆனில் வருவதாகக் கூறி கவிஞர்களை இஸ்லாம் புறக்கணிக் கின்றது எனச் சிலர் தவறாகக் கூறுகின்றனர். இதன் பொருள் என்ன? என்பதனை இங்கு கூறிவிடுதல் அவசியம் எனக் கருதுகின் றேன். குர்ஆனில் வரும் இந்த வசனத்தின் ஒருபகுதியை மட்டுமே தெரிந்தவர்கள் அவ்வசனத்தின் முன் பின் தொடர் வசனங்கள் முழுவதையும் அறியாமல் கண்ணை மூடிக்கொண்டு சில கருத்துக் களைக் கூறியுள்ளதனால் வந்த விளைவே இதற்குக் காரணமாகும்.

கவிஞர்கள் என்பவர்கள் எல்லாம் சமய சட்டத்தைப் புறக் கணிப்பவர்கள் என்று பொருளல்ல. கவிஞர்கள் சுதந்திரமான சிந்தனை உள்ளவர்கள், இவர்களது நோக்கும் போக்கும் கள்ளம் கபடமற்ற நிலையில் எதையும் பொதுவாகச் சிந்திக்கும் தன்மை யுடையதேயாகும். இதுவே உண்மையான பொருளுமாகும்.

எனவேதான் நபிகள் நாயகம் கவிஞர்களை நாம் ஆதரிக்க வேண்டுமென்று முன் மாதிரியாக கவிஞர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து அப் பண்பை நமக்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறார் கள். அப்படி இருந்தும் கவிஞர்களைப் பற்றியும் அவர்கள் ஆக்கித் தரும் இசை நலப் பாக்களைப் பற்றியும் விவரம் தெரியாத நிலை யில் வேறுபட்டு நிற்பது ஈடுபாடில்லாத நிலையையே காட்டு கிறது. இஸ்லாத்தைப் பற்றியும் நபிகள் நாயகமவர்களைப் பற்றி யும் குர்ஆனைப் பற்றியும் நன்கு புரியாதவர்களே இத்தகையவர் கள் என்று நாம் உணர்கின்றோம்.

குர்ஆனில் கவிஞர்களைக் கண்ணியப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அதன் 114 அத்தியாயங்களில் 26வது அத்தியாயத்திற்கு 'அஷ்ஷுஅரா' (கவிஞர்கள்) என்ற பெயர் சூட்டியே இறைவன் அருளியுள்ளான். இறை நம்பிக்கை இல்லாத கவிஞர்கள் என்றும் இரு பிரிவாகத் தெளிவாக மேற் கூறிய அத்தியாயத்தில் பகுத்துக்கூறியுள்ளான்.ஒருகட்டுப்பாடும் வரம்பும் நேர்மையும் இல்லாத கவிஞர்கள் எதைத்தான் பின் பற்றி நடப்பது; எதைத்தான் பின் பற்றுதல் கூடாது என்றெல் லாம் பார்க்காமல் வரம்பு மீறும் தன்மையுடையவர்கள் என்று தான் உலகுக்கு உணர்த்த அப்படிப்பட்டவர்களைப்பற்றியும் குர் ஆன் எடுத்தியம்பி இனம் காட்டிச் செல்கின்றது. இதோ! அந்தக் குர்ஆன் வசனங்கள்!

'வஷ் ஷுஅராஉ யத்தபிஉஹுமுல் காவூன்...'என்றும் இதனை அடுத்து 'இல்லல்லதீன அமனூ வ அமிலுஸ் ஸாலிஹாத்தி...'என்றும் 26-வது அத்தியாயத்தில் 224,225,226 என்ற வசனங்களில் உள்ளது உள்ளபடி தெளிவாகக் கூறப்பட்டிருப்பதனை அனைவரும் நோக்குவார்களாக! இவற்றின் பொருளைக் கீழே படிப்பீர்களாக!

ஏக இறை நம்பிக்கையற்ற—கவிஞர்களைத்தான் வழிகெட்ட மக்கள் பின்பற்றுகின்றனர்...என்றும். இதனால் இக்கவிஞர்கள் திடல் திடலாக அலைந்து திரிகின்றனர்..., என்றும் இவர்கள் சொல்லிய வண்ணம் செயலில் காட்டாதவர்கள்...என்றும் குர் ஆன் கூறுகின்றது. இந்த வசனங்களைத் தொடர்ந்தே ஏக இறை

நம்பிக்கையுடைய கவிஞர்களோ நற்பணிகள், நற்செயல்களை நடைமுறையில் கொண்டுவருவதோடு தங்கள் கவிதைகளில் அல்லாஹ்வை அதிகமாக நினைவு படுத்தியே வருகின்றனர்... என்றும் குர்ஆன் நன்றாக எடுத்தியம்புகின்ற புான்மையையும் மேன்மையையும் நாம் உணர முடிகின்றது.

இச்சொற்றொடர்களை முழுமையாகக் கவனிப்பவர்களுக்கு குர்ஆன் எந்தக் கவிஞர்களைப் புகழ்கின்றது என்றும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றதல்லவா?

கொள்கைப் பிடிப்பும் நன் நடத்தையும் கொண்ட கவிஞர்களின் உயர்வைப்பற்றி நபிகள் நாயகமவர்கள் தோழர் பெருமக்களை விளித்து ''அஷ்ஷுஅரா தலாமீதுர் ரஹ்மான்...'' (நற்கவிஞர்களெல்லாம் இறைவனின் சீடர்கள்) என்றும் 'இன்ன மினஷ் ஷிஃரி லஹிக் மத்துன்' (கவிதையில் ரத்தினச் சுருக்கமான பேரறிவுகள் உள்ளன) என்றும் எவ்வளவு அழகாகக் கூறியுள்ளார்கள் எனத் தெரிந்து கொள்ளவும் முடிகின்றன்றோ!

எனவே கவிஞர்கள்-காலத்தின் காவலர்கள்; பிறந்து வாழ்ந்து இறந்து போகும் மனுக் கூட்டத்தின் வாழ்வு நலங்களைப் பற்றி பிற்காலத்து மக்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டிச் செல்லும் இறவாதவர்கள். இறைவனை நம்பி மனித வாழ்வு அமைய வேண்டும்; அந்த இறை நம்பிக்கையின் அடையாளமாக நற்பணிகள் ஆற்றவேண்டும்; தீயவைகளைத் தவிர்க்க வேண்டும் என்று பாடுபவர்கள் உண்மைக் கவிஞர்களாவார்கள். இறைவனுவது, ஒருவனுவது. எவனும் இறைவன் என்று கிடையாது; மனிதன் இஷ்டம் போல வாழலாம்; எப்படியும் வாழலாம். கட்டுத்திட்டம் எதுவுமின்றி வாழலாம் என்று வரம்பை மீறி வாழ்பவர்கள் எல்லோரும் வரம்பை மீறிய கவிஞர்கள் தானே! இதனையே குர்ஆன் இரு பகுப்பாக எடுத்துக் கூறி இருக்கின்றது.

> ''கவிதை யாப்பது என்ற தனி ஆற்றல் இறைவனின்
> அருட்கொடையாகும்; இதனைப் புரிந்து கொள்
> பவர்கள் நுண்மதி படைத்த பகுத்தறிவாளர்களே''

என்று அல்லாமா இக்பால் அவர்களும் மந்தபுத்தியுடையவர்களுக்கு இசையின் இன்பம் தெரியாது... என்று இக்பாலின் ஆசிரியரான அல்லாமா 'தாஉ' அவர்களும் இசை என்ற பானத்தைப் பருகி இறைவனை அறியும்போது ஏற்படுகின்ற இன்பத்துக்கு ஈடாக எதனைச் சொல்வது?...என்று ரிபாயி ஆண்டகை அவர்களும் இறை மெய்ஞ்

ஞானப் பூங்காவிற்கு ஏகத்துவ இசையானது வழிகாட்டிச்செல்லுகின்றது...'என்று இமாம் கஸ்ஸாலி அவர்களும் இன்னும் எத்தனையோ ஞானவான்களும் எடுத்துக் கூறியுள்ளனர். 'ஒருவனுக்கு இனிய குரலை இறைவன் தருவது என்பது பேறுகளுள் ஒரு அரிய பேருகும். இக்குரலை இறைவனுக்குகந்த வழிகளில் பயன்படுத்துபவன் எவனோ அவனும் ஒரு ஞானியே'' என்று மௌலானா ரூமிஅவர்கள் கூறியதை இன்குரல்வாணர்கள் உய்த்துணரவேண்டுமன்றோ! விரிவஞ்சி இத்துடன் அவற்றையெல்லாம் இங்கு கூற இயலவில்லை.

நபிகள் நாயகமும் நற்கவிஞர்களும்

மக்கா வெற்றிக்குப் பிறகு மதீனாவில் இஸ்லாமிய இறையரசு நிறுவப்பெற்று நபிகள் நாயகமவர்களின் தலைமையில் முஸ்லிம்கள் அமைதியான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். மக்காவில் இஸ்லாத்தை ஏற்றிராத ஒரு கவிஞரின் இரண்டு மக்கள் இவ்விதம் பேசிக் கொள்கின்றனர். 'மக்கா, மதீனாவில் அநேகமாக பெரும்பாலோர் புதிய மார்க்கமான இஸ்லாத்தைத் தழுவிவிட்டனர். கவிஞர் மக்களாகிய நாம் இருவரும் ஓதியறியாத முஹம்மத் அவர்கள் மீது எப்படி நம்பிக்கை கொள்வது? என்று தயங்கி நிற்கின்றோம். இருப்பினும் நான் மதீனா சென்று முஹம்மத் அவர்களை நேரில் கண்டு உண்மை தெரிந்து வரும் வரை எனது ஆட்டுப் பண்ணையை நீர் பார்த்து வரவும்' என்று தம்பியிடம் கூறிவிட்டு அண்ணனாகிய கஃபிப்னு ஜுஹைர் என்பவர் மதீனா புறப்பட்டுவிட்டார்.

மதீனா வந்து சேர்ந்த கவிஞர் — மஸ்ஜிதுந் நபவியில் அமர்ந்து தோழர் பெருமக்களுக்கு நல்லுரை வழங்கிக் கொண்டிருந்த நபிகள் நாயகமவர்களை முதன் முதலாகக் கண்டதும் பேரொளி பரப்பிக் கொண்டிருந்த பெருமானாரின் ஈர்த்தொளி நல்கும் பேரழகில் தமது புலமை, சிந்தனை அனைத்தையும் பறிகொடுத்துவிட்டார். அனைத்தையும் அல்லாஹ்வின் அளப்பரும் ஆற்றலின் சக்தியினால் அறிந்து கொண்ட நாயகமவர்களோ கவிஞரின் மகனார்க்கு உரிய மரியாதை கொடுத்தும் தங்கள் பக்கம் இருக்கை தந்தும் கண்ணியப்படுத்தவே எதையும் சிந்திக்காமல் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

கவிஞர் கஃபிப்னு ஜுஹைர் சும்மா இருக்க முடியுமா? அந்த இடத்திலேயே நாயகமவர்களையும் அன்னார் தோழர் பெருமக்களையும் பற்றி புகழ்மாலை பாடத் துவங்கிவிட்டார். 'பானத்

ஸுஆது ஃபகல் பில்லாஹி மத்பூலு' என்ற 47 கவிதைகளைச் சர மாரியாகப் பொழிந்து இசையுடன் பாடினர். அக்கவிதையின் பொருளோ அற்புதமானது. 'ஸுஆத் என்ற பேரழகி என்னை விட்டுப் பிரிந்து விட்டாள்; அவளின் பிரிவாற்ருமை என்னை மலை போன்ற கவலையுள் ஆழ்த்திவிட்டது' என அரபு மரபுப்படி இசைக்கலானர்.

இந்த உலகில் எனது மாபெரும் கவலையை நீக்க வல்ல சக்தி எதற்காவது உண்டா?... என நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதத்தில் தங்கள் திருமுகத்தைப் பார்க்க நேர்ந்தது. ஆம்! தங்களின் பேரழகு கொழிக்கும் திருமுகத்தைக் கண்ணுற்றதும் மலை போன்ற மாபெரும் எனது கவலை என்னை விட்டும் நீங்கியது; மேலும் என் மனதில் நிரந்தரமான நிம்மதி யையும் நல்கியது எனும் கருத்துப்படப் பாடத் துவங்கிவிட்டார்: ...முற்பகுதியில் நாயகமவர்களைப் பற்றிப் பாடும்போது தங்களைப் பற்றி புகழ்கின்ருர் என எண்ணி அடக்கமாக அமர்ந்த வண்ணம் கேட்டுக்கொண்டிருந்தார் நாயகமவர்கள். ஒரு பெண்ணைப் பற்றிக் கூறுகிருரே இக்கவிஞர்—என்று நாயகம் மறுக்கவில்லை. பிற் பகுதியிலோ தோழர் பெருமக்களைப் புகழ்ந்து கவிஞர் பாடிவரும் போது அப்புகழை ஆதரிக்கும் விதத்தில் இளநகையை இதழில் வரவழைத்த வண்ணம் என்ன அழகாக—உண்மையாக பொருத் தமாகப் பாடுகின்ருர் பாருங்கள் — என நாயகமவர்கள் கூறி விட்டுத் தங்கள் மேனியில் அணிந்திருந்த பச்சைப் போர்வையை எடுத்துப் பக்கத்தில் அமர்ந்து கவிதைகளை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த அலியார் அவர்களிடம் தந்து இந்த எனது போர் வையை கஃபிப்னு ஜுஹைர் அவர்களுக்குப் பொன்னடையாக நீங்களே 'போர்த்திக் கண்ணியப்படுத்தி வைப்பீராக! எனக் கூற அலியார் அவர்களும் கவிஞருக்குப் போர்த்திக் கண்ணியப்படுத்தி வைத்தார்கள். புகழுக்குரிய நாயகமவர்களே புலவர் பெருந்தகை யவர்களுக்குப் பொன்னடை போர்த்திக் கௌரவித்த வர லாற்றை இதிலிருந்து நாம் தெரியும்போது மனதுக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது என்பதனையும் புரிந்துகொள்கின்ருேம்.

இன்னொரு சம்பவத்தைப் பாருங்கள்! நாயகத்தின் பகைக் கவிஞர்கள் நாயகமவர்களைப் பற்றியும் நாயகத் தோழர் பெரு மக்களைப் பற்றியும் வாசகக் கவிதைகள் பாடி எள்ளி நகையாடு வதோடல்லாமல் இஸ்லாத்தைப் பற்றியும் ஏளனமாகப் பாடிக் கொண்டிருக்கின்றனர். அதுசமயம் தோழர்களின் யோசனைப் பிர காரம் முஸ்லிம் கவிஞரான 'ஹஸ்ஸான் இப்னு தாபித்' என்பவரை

மறுப்புக் கவிதைகள் பாட வைத்தார்கள். நபிகள் நாயகமவர்களே மஸ்ஜிது நபவி பள்ளி வாயிலுக்கண்மையில் பேரீத்த மரக் கட்டைகளைக் கொண்டு கவியரங்கம் ஒன்றினைத் தங்கள் கரங்களாலேயே கட்டிக்கொடுத்து, ஹஸ்ஸான் அவர்களை மேலே தூக்கி அமர வையுங்கள் எனத் தோழர் பெருமக்களுக்குக் கூற—அவ்விதமே கவியரங்கப் பந்தல் மேல் கவிஞரை அமர வைக்கவும் செய்தார்கள். ஹஸ்ஸான் அவர்களே இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றி கவிதை பாடுங்கள் எனக் கட்டளையிட—அதுசமயம் பகைக் கவிஞர் பற்றி கொஞ்சம் ஹஸ்ஸான் தயக்கம் கொள்ள—நீங்கள் பாடுங்கள்; உங்கள் நாவில் அற்புதக் கவிதைகள் விளையாடிவரும்; நீங்களே திகைப்பீர்கள். இருப்பினும் இதோ! நானும் பிரார்த்தனை செய்கின்றேன் என்று நாயகமவர்கள் நவின்ற பின் இரு கரங்களை வானை நோக்கி ஏந்தியபடி,

"அல்லாஹும்ம! அய்யித்ஹு பிருஹில் குதுஸ்"

'இறைவா! உனது பேரருளை இவருக்குச் சொரிந்து இவருக்கு உதவி புரிவாயாக!' என்றும் கூறினர்கள் என்று சரித்திரத்தில் படித்தறிகின்றோம்.

இதுபோன்றே முதல் கலீபா அபூபக்கர் சித்தீக் அவர்களும்கூட ஒரு நாள் "ஷபீஹுக்க பத்ருல் லைலி பல்அன்த்த அன்வரு......" என்று நாயகமவர்களைப் பார்த்து நாயகமே! இருளில் புலர்ந்த பூரண மதிபோல் என்ன? அம்மதியில் கூட மருவுண்டு; நீங்களோ மறுவிலாதெழுந்த முழு மதிபோல் எங்கள்பால் எழுந்தருளியுள்ளீர்கள்—என்று அரபுக் கவிதைகளில் இசைத்து இசைத்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

நபிகள் நாயகமவர்களின் திருமகளார் பாத்திமா நாயகியாரைப் பார்த்து அவரது அன்புக் கணவர் அலியார் அவர்கள்,

"இன்னன் நிஸாஅ ஷயாத்தீனுன் குலிக்ன லனா"
(பெண்கள் எல்லாம் ஆண்களுக்காகப் படைக்கப்பட்ட
ஷைத்தான்களாக சில சமயங்களில் உள்ளனர்)

இன்குரலால் இசைத்துப்பாடி மனைவியாரை கேலி செய்ய முனைந்தபோது—இது கேட்ட பாத்திமா நாயகியாரும் கணவனைப் பார்த்து—அப்படியன்று'...

"இன்னன் நிஸாஅ ரயாஹீனுன் குலிக்ன லக்தும்"

(பெண்கள் எல்லாம் ஆண்களுக்காக ஆக்கியருளப்பட்ட நறுமணப் பூக்களாக உள்ளனர்).

என இன்குரலால்—மென்குரலால்—புன்முறுவல் பூக்க மறுப்புக் கவிதை பாடி திகைக்கச் செய்து விட்டார் என்ருல் கவிதையின் ஆற்றலேயும் இசையின் மேன்மையையும் புரிந்து கொள்கின்ரேம்.

நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் பாட்டனர் அப்துல் முத்தலிப் அவர்களோ—பெருந்திருவைப் பெற்ற பேரானந்தத்தில் விருந்து ஒன்று வைத்து மக்கத்துப் பிரமுகர்களேயும் கவிஞர் பெருமக்களேயும் கண்ணியப் படுத்தியதோடல்லாமல் மகிழ்ச்சியில் திளேத்துப்போய் தாங்களாகவே கவிதைகள் அப்போதைக்கப்போதே இயற்றி அவற்றைப் பலர் முன்னிலேயில் இசைத்துப் பாடிக் காட்டினுர்கள் என்ருல் பேரர் நாயகத்தின் பால் பேரன்பு கொண்ட காட்சியையும் இங்கு புரிந்து கொள்கின்ரேம். அன்று அவர்கள் பாடிய

அல்ஹம்து லில்லாஹில்லதி அ்ஃத்தானி
ஹாதல் குலாமத் தய்யிபல் அர்தானி

மனம்பொருந்திய மகனேயளித்த மாபெரியோனே! மனம் வைத்து உன்னே நாங்கள் மகிழ்ந்தேற்றுகின்ரேம் என்று பாடிப் பரவசம் கொண்டார்கள் என்ருல் கவிதைகளேப் பற்றியும் அதற்றகேற்ற இசையைப் பற்றியும் இனியும் என்ன இருக்கிறது எழுதுவதற்கு!

இதே போல்தான் இன்றும் புர்தா ஷரீப், வித்ரிய்யா, சுப்ஹான மவ்லித் போன்ற ஏராளமான பாமாலேகள் நிறைய உலகம் தழுவிய அளவுக்கு இசைக்கப்பட்டுக் கொண்டு நடைமுறையில் இருந்து வருகின்றன. அல்லாமா இக்பாலின் கவிதைப் படைப்புக்களேயும் மஸ்னவி, குலிஸ்தான், போஸ்தான் கவிதை நூல்களேயும் இஸ்லாமிய உலகம் மறந்து விடுமா? யுக முடிவுநாள் மட்டும் இவைகள் இருந்து இன்பூட்ட வல்லவைகளல்லவா?

கவிதைக் கலேயைக் காத்த கருணே நபி

ஒரு சமயம் பெருமானுர் நபிகள் நாயகம் அவர்கள் இடத்தில் வறுமையில் வாடிய கவிவாணர் ஒருவர் வந்து தனது கொடிய வறுமையை விளக்கிப் பாடினுர். அதனேக் கேட்ட நாயகமவர்கள் அருகில் இருந்த தோழர்கள் இடத்தில் இவ்வாறு மொழிகின்ருர்: "இப்புலவரை அப்புறம் அழைத்துச் சென்று இவரின் நாவைத் துண்டித்து உடனே அனுப்பிவையுங்கள் என்கிருர்கள். தோழர் பெருமக்கள் பொருள் புரியாமல் அப்படியே திகைத்து நிற்கின்றனர்.... பெருமானுர் கட்டளேயை எவ்வாறு நிறை

வேற்றுவது? என்று வியப்பில் ஆழ்ந்து போய் விட்டனர். வந்த புலவரும் இம்மொழியைக் கேட்டுத் திகைத்து அச்சமுற்று என்ன நிகழுமோ? என நடுங்கிய நிலையில் நிற்கின்றார்.

சற்று நேரத்தில் புன்னகை புரிந்தார் பெருமானாரவர்கள். எல்லோரும் பெருமானாரின் ஒளி முகத்தை உற்று நோக்க—என்ன நண்பர்களே! திகைத்து விட்டீர்களா? இக்கவிஞர் அவர்கள் அருமையாகப் பாடக் கூடியவர். வறுமை என்று சொல்லக் கூடாது. நம்மிடம் வந்த பிறகு அவர் இன்னொரு இடத்தில் வறுமை என்று சொல்லாத அளவுக்குப் பொருளை ஈந்து அனுப்பி வையுங்கள். வறுமை கூறும் அவருடைய இந்த நாக்கு இனி மேல் அவருக்கு வேண்டாம்; அவர் புது நாவையும் புதுப் பாவை யும் வழங்கட்டும்; இன்றோடு வறுமை—வறுமை என்னும் அவர் நாவு மாறட்டும் என்று விளக்கம் தரும்போது எல்லோரும் மகிழ்ச்சி கொண்டார்கள். தோழர்களும் அள்ளி அள்ளி புல வருக்கு வழங்கினார்கள். அன்று முதல் இறுதி நாள் வரை பிறர் பொருளை தேவைப்படவுமில்லை;மன நிறைவோடு மாகவி கள் மலைபோல் பாடிக் குவித்து விட்ட காட்சியையும் வரலாற்றில் காணுகின்றோம். நண்பர்கள் அனைவரும் பெருமானாரின் கவிதைப் பற்றை நன்கு உணர்கின்றார்கள். இதனை நன்றாக உணர்ந்தவர்கள் இஸ்லாத்திற்கும் கவிஞர்களுக்கும் உள்ள தொடர்பை அறிவார் கள். பெருமானார் அவர்களே கவிதைகளை அமைத்தும் இசைத் தும் கவிஞர்களை ஆதரித்தும் வந்திருக்கிறார்கள் என்பனவற்றை யெல்லாம் அறியாதவர்களே கண்ணை மூடிக்கொண்டு எதையும் கூறிவிடுகின்றனர்.

எனவே இதுவரை கூறிவந்ததிலிருந்து கவிதைக்கும் இசைக் கும் கவிஞர்களுக்கும் இஸ்லாம் எந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்திருக்கின்றது என்பனவற்றையெல்லாம் தெளிவாக இங்கு தெரிந்து கொண்டோம்.

இஸ்லாமும் அதற்கு உடன்பாடில்லாத இசையும்

மனிதன் தனது இனிமையான குரலால் இசைக்கும்போதே அந்த இசைக்கு இவ்வளவு இன்பம் இருக்கிறது; அளவற்ற ஈர்ப்புச் சக்திகள் உள்ளன; இந்தத் தனிக்குரலின் ஈர்ப்புச் சக்திகளுக்கு மேல் நவீன இசைக்கருவிகளை வைத்து ஒன்றை இசைக்கும் போது அதன் சக்தி ஈர்ப்புக்குமேல் ஈர்ப்பை நல்க வல்லதாக ஆகி விடக்கூடும்...என்றெண்ணியே இசையை அனுபவிப்பதற்கும்

ஒரு வரம்பு உண்டு என்று இஸ்லாம் கூறுகிறது. இசைக்கருவிகளை இஸ்லாம் ஏன் மறுக்கிறது என்று பார்க்கும்போது பல உண்மைகளைத் தெரிந்து கொள்கின்றோம்.

அளவு முறைக்காக மனிதனின் குரலோடு இசைக்கருவிகளைப் புகுத்துகின்றோம் என்று கூறினாலும் மனிதனின் வாழ்வுக்குறியானது மகத்தானது; அந்த வாழ்வுக்குறியைக் கெடுத்துவிடக்கூடிய விதத்தில் மனிதன் ஈடுபடல் கூடாது என்றுதான் இஸ்லாம் இயம்புகின்றது. மனிதன் தனது புனிதமான வாழ்வையும் குடும்பத்தையும் நாட்டையும் உலகையும் எல்லாவற்றிற்கும் மேலாக அவற்றின் பொறுப்பையும் எண்ணிப்பார்க்கும்போது தான் தீய இசைகளும் இசைக்கருவிகளும் மனிதனுக்கு எவ்வளவு உடன்பாடில்லாதது என்பதனையும் உணர்ந்து கொள்கின்றான்.

எனவே இசையில் 'நெறிஇசை' என்றும் 'வெறிஇசை' என்றும் இருபகுப்புண்டு. வெறிஇசை—என்பது மனித மனத்தின் புனிதத்தைக் கெடுத்து உணர்வு நிலைகளில் மனிதனைக் கீழ்த்தரமாக ஆக்க வல்லதாக உள்ளது, இந்த வெறி இசையை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. சிற்றின்ப வேட்கைகளைத் தூண்டும் இசையைக் கேட்பதும் இசைக்கருவிகளால் கேட்பதும் மார்க்க இயலுக்கு முற்றிலும் ஒவ்வாததாகும்.

இன்றைய நவீன கருவிகளின் கூட்டிசை மனிதனை விலங்கு நிலைக்கு ஆக்க வல்லதாகும். குமட்டும் கூச்சலையோ, கூட்டொலிகளையோ இசை எனக் கொண்டு வெறியாட்டம் ஆடுவதைப் பார்ப்பதும் கேட்பதும் பிழையே; இதனையே இஸ்லாம் கண்டிக்கின்றது. அவுரங்கஜீப் மன்னரைப் போன்றவர்கள் இசையைப் பற்றி கூடாதது என்று வழங்கிய கருத்தும் இதுபோன்ற வெறி இசை பற்றியதென்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சத்தம் எல்லாம் சங்கீதமாகிவிடாது அல்லவா?

இஸ்லாம் மார்க்கத்தில் இசை நலம் மிக்க புனிதமான இசைப் பிரபந்தங்கள் வேறு எம்மொழியிலும் இல்லாத வகையில் தமிழில் உண்டாகி உள்ளதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவை எல்லாம் ஞான வெள்ளமாகவே கானம் எழுப்புகின்றன. ஆம்! குணங்குடியாரின் ஞானப் பாடல்கள்—எல்லாம் இசையில் குழைத்தெடுத்த இனித்தாளும் செல்வங்கள். காசிம் புலவரின் திருப்புகழ் காதினிக்கப் பாட வைத்த கற்கண்டு சொற் செல்வம். காசிம் புலவரின் திருப்புகழைப் பாடப்பாட ஆன்மீகப்

பேரொளியே பொங்கும். ஆக, இஸ்லாம் கவிஞர்களைப் புறக்கணிக்கும் சமயம் அல்ல; இஸ்லாம் இசைக்கு எதிரியும் அல்ல என்பதை நாம் புரிந்து கொண்டால் அதுவே போதும். கவிதை என்று ஆக்கப்பட்டாலே அக்கவிதைகளின் அமைப்பிற்கேற்ப பாடவும் இசைக்கவும் செய்யலாம் என்ற நியதி வந்துவிடுகிறது. இக்கட்டுரையில் இசை என்று வந்திருப்பதெல்லாம் இசைக் கருவிகள் ஏதும் இல்லாமல் மனிதன் தனது குரல் கொண்டு மட்டும் இசைப்பது, ராகமாகப் பாடுவது என்ற கருத்தில் உள்ளதாகும். இஸ்லாமிய ஷரீஅத் சட்டதிட்டங்களின்படி நான்கு இமாம்களிடத்திலும் மனிதன் கவிதைகளைப்படிக்கும்போது இசைக்கும் கருவிகளைப் பயன்படுத்துவது கூடாது என்றும் அப்படிப் பயன்படுத்துவது ஹறாம் (விலக்கப்பட்டது) என்றும் கூறப்பட்டிருக்கிறது. சில சூஃபிய்யாக்கள் இவைகளைக்கூடும் என்று கூறி இருந்தாலும் அவைகள் எல்லோரும் தங்களை மறந்த நிலையில் கூறியுள்ளார்கள் என்றுதான் கருத்துக்கொள்ளவேண்டும். சூஃபிய்யாக்களைக் குறை சொல்லக் கூடாது. எனவே இசைக்கருவிகளுக்கு இஸ்லாம் தடை விதித்துள்ளது என்றுதான்—தப்சீர் மஆலிமுத்தன்ஜீல், காஸின், ரூஹுல்பயான், ஜாமிஉல் பயான், மிஷ்காத், ஸாவி, புகாரி, அய்னி, பத்ஹுல் கதிர். ரத்துல் முக்தார், ஆலம்கிரிய்யா, ஹிதாயா போன்ற மார்க்க சட்ட நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.